بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/11/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'அல்லாஹ் தங்களுக்கு ரிஸ்க்கை விசாலமாக்கி இருக்கின்றான். தங்களுக்கு வெற்றிகள் போக அதிகப்படியான செல்வங்களையும் வழங்கி இருக்கின்றான். பிறகு, தாங்கள் ஏன் மிருதுவான உணவை உண்ணக்கூடாது? ஏன் மென்மையான ஆடையை அணியக்கூடாது?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'எனக்கு ஆற்றல் இருக்கும் வரையில் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வாழ்க்கையின் கடினங்களில் இணைந்திருப்பேன். அப்போதுதான் என்னால் அவர்கள் இருவரது நிம்மதியான வாழ்க்கையிலும் இணைய முடியும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இக்ரிமா பின் காலித் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இன்னும் சில மக்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'தாங்கள் மிகச் சிறந்த உணவுகளை உண்டால், உண்மைக்காகப் பணியாற்றுவதற்குத் தாங்கள் அதிக வலுபெற்றவர் ஆகிவிடுவீர்கள்' என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய வழியை விட்டு விட்டால் என்னால் அவ்விருவரையும் சந்திக்க முடியாது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அச்சம் மற்றும் அபாயத்தின் காலகட்டத்தில் எளிமையின் அவசியத்தை முன்னிறுத்தி, ஒன்றுக்கும் மேற்பட்ட குழம்பை பயன்படுத்தக் கூடாது என்று வழிகாட்டி இருந்தார்கள். ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன் காடி (vinegar) மற்றும் உப்பு வைக்கப்பட்டது. அன்னார் 'இவை இரண்டு குழம்புகள் ஆகும்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது இந்த செய்கை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் எல்லை ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களும் தஹ்ரீகே ஜதீதின் அறிவிப்பை செய்தவாறு, ஒவ்வொரு அஹ்மதியும் இன்றிலிருந்து ஒரு குழம்பு மட்டுமே பயன்படுத்துவேன் என்று உறுதிகொள்ள வேண்டும். அப்போதுதான் ஜமாஅத் அன்பர்கள் தங்களது செலவுகளைக் குறைத்துக் கொண்டு சந்தா வழங்க முடியும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

அல்லாஹ்வின் அருளால் தற்போது சூழ்நிலை வேறு விதமாக உள்ளது. எனவே இந்தக் கட்டுப்பாடு இல்லை. ஆனாலும் கூட வீண் விரையம் செய்யக்கூடாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ரஹ்மானின் அடியார் ஆவதற்கு, ஒன்று தனது செல்வத்தில் வீண் விரையம் செய்யக்கூடாது. இரண்டாவது ஒருவரது உணவு, உடல்ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் நிலைநாட்டுவதற்காக இருக்க வேண்டும். அவர் உடுத்துவது உடலை மறைப்பதற்காகவும் பாதுகாப்பாக வைப்பதற்காகவும் இருக்க வேண்டும் என்ற இரண்டு நிபந்தனைகளை எடுத்துரைத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை சிரியா நாட்டிற்குச் சென்றார்கள். அங்கு சில ஸஹாபிகள் பட்டாடைகள் உடுத்தி இருப்பதைக் கண்டு மிகவும் கோபமுற்றார்கள். இதனால் ஒரு ஸஹாபி, அதற்குள் தடித்த கம்பளியால் ஆன கடினமான மேலங்கியை உடுத்தி இருப்பதை காண்பித்து, 'நாங்கள் எங்களது உடைகளை நாட்டின் அரசியல் காரணங்களுக்காக மாற்றியிருக்கிறோம். ஏனென்றால், இங்குள்ள மக்கள் செல்வச் செழிப்புடன் வாழும் செல்வந்தர்களைக் கண்டு பழக்கப்பட்டு விட்டார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பகட்டான மற்றும் ஆடம்பரமான ஆடையை எந்த அளவுக்கு எதிர்த்து வந்தார்கள் என்றால், வெற்றி காணப்பட்ட எதிரிகூட அவ்வாறான ஆடம்பர உடையை உடுத்திக் கொண்டு தம்முன் வருவதை விரும்பமாட்டார்கள். 'துஸ்த்தர்' வெற்றியின் போது பாரசீக தளபதி ஹர்மஸானைப் பட்டாடை உடுத்தியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முன்பு அனுப்பப்பட்ட போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நான் நெருப்பிலிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருகின்றேன்; அல்லாஹ்விடம் உதவி தேடுகின்றேன்' என்று கூறினார்கள். ஹர்மஸானுடைய ஆடம்பர உடையும் அணிகலன்களும் கழற்றப்படாத வரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருடன் பேசவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது பணிவு மற்றும் இறையச்சத்தின் தரத்தைக் குறித்து இவ்விஷயத்தில் இருந்து நாம் புரிந்து கொள்ளலாம். ஹஸ்ரத் உர்வா பின் ஸுபைர் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைத் தோளில் ஒரு தண்ணீர் குடம் சுமந்திருக்கக் கண்டேன். நான் அன்னாரிடம், 'அமீருல் முஃமினீன் அவர்களே! தங்களுக்கு இது உகந்தது அல்ல' என்று கூறினேன். அதற்கு அன்னார், 'பல்வேறு சமுதாயங்களின் பிரதிநிதிக் குழுக்கள் கீழ்ப்படிந்து, கட்டுப்பட்டவாறு என்னிடம் வந்த போது, என்னுடைய உள்ளத்தில் நான் பெருமிதத்தை உணர்ந்தேன். எனவே நான் அ(ந்தப் பெருமிதத்)தைத் தண்ணீர் குடம் சுமந்து சென்று உடைக்க வேண்டும் என எண்ணினேன்' என்று கூறினார்கள்.

ஒருமுறை ஹஜ் செய்து விட்டு வந்து கொண்டிருந்த போது ஒரு மரத்தின் அருகில் நின்று விட்டு கூறினார்கள்:

ஒருகாலத்தில் நான் எனது ஓர் ஒட்டகத்தை மேய்த்து வந்தேன். இந்த மரத்தின் கீழ் (இளைப்பாறுவதற்காகப்) படுத்ததனால் எனது தந்தை என்னை மிகவும் திட்டினார். தற்போது இப்படி ஒரு நேரமும் வந்திருக்கிறது! பல லட்சம் மனிதர்கள் எனது சைகைக்கு, உயிரைக் கொடுக்கவும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டதனால், அல்லாஹ் எனக்கு இந்த அந்தஸ்தை வழங்கியுள்ளான்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள்! ஒட்டகத்தை மேய்க்கும் ஒருவருக்கும் அரசாட்சிக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? ஆனால் பாருங்கள்! அன்னார் எப்படிப்பட்ட செயல்களை செய்தார்கள் என்றால்,

இன்று உலகம் அவர்களுக்கு முன் தலை சாய்க்கின்றது. அவர்களது அரசியல் ஞானத்தைப் புகழ்கிறது. மேலும் பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு சாதாரண வியாபாரியாக இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இத்தகைய அறிவு, ஞானம் மற்றும் ஆழ்ந்து சிந்திக்கும் திறன் ஆகியவை எங்கிருந்து கிடைத்தன என்று உலகம் இன்று வியக்கின்றது.

அவர்களுக்குத் திருக்குர்ஆனிலிருந்து எல்லாம் கிடைத்தது என்று நான் கூறுகிறேன். அன்னார் திருக்குர்ஆனில் ஆழ்ந்து கவனம் செலுத்தினார்கள். எனவேதான் முழு உலகிற்கும் தெரியாத விஷயங்கள் எல்லாம் அன்னாருக்குத் தெரிந்துவிட்டன. ஏனென்றால், திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஓர் ஆயுதம் என்றால், அதைக் கொண்டு உள்ளத்தைப் பட்டைத் தீட்டினால் அதில் அனைத்து உலக ஞானங்களும் தென்படும் அளவுக்கு அது தூய்மையாகி விடுகிறது. மனிதனுக்கு எத்தகையதொரு கதவு திறந்து விடுகிறது என்றால், எவர் ஒருவராலும் தடுக்கப்பட்டாலும் சரி! அவனது உள்ளத்தில் இறக்கப்படுகின்ற ஞானம், தடைபட முடியாது. எனவே ஒவ்வொரு மனிதரும் திருக்குர்ஆனை ஓதுவதற்கும் அதில் ஆழ்ந்து கவனம் செலுத்துவதற்கும் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது பணிவு மற்றும் தன்னடக்கம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இவ்வாறு கிடைக்கிறது. ஜுபைர் பின் நுஃபீர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு குழு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'இறைவன் மீது ஆணையாக! நாங்கள் தங்களை விட அதிகம் எந்தவொரு மனிதரையும் நீதிமானாகவும் உண்மையுரைப்பவராகவும் நயவஞ்சகர்களுடன் கடினமாக நடந்து கொள்பவராகவும் கண்டதில்லை' என்று கூறினார்கள். அதற்கு அவ்ஃப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை விடச் சிறந்தவராக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் கண்டிருக்கிறோம்.'

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'அவ்ஃப் உண்மையுரைத்தார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்ர் (ரலி) அவர்கள் கஸ்தூரியின் நறுமணத்தை விட அதிகம் தூய்மையானவர் ஆவார்கள். மேலும், நான் எனது குடும்பத்தாரின் ஒட்டகங்களை விட அதிகம் வழிமாறி உள்ளேன்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் உமர் (ரலி) அவர்கள் ஆகியோருடன் நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அமர்ந்திருந்தோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்து சென்று விட்டார்கள். அன்னார் திரும்பி வர தாமதமாகி விட்டது. எனக்குக் கவலை ஏற்பட்டது. நான் அன்னாரைத் தேடிச்சென்று ஒரு தோட்டத்தில் காணப்பெற்றேன்.

அன்னார் எனக்குத் தமது காலணிகளை வழங்கி, 'இந்தத் தோட்டத்திற்கு வெளியே உமக்கு யார் கிடைத்தாலும், அவர் உள்ளத்தில் உறுதி கொண்டவாறு அல்லாஹ்வையன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி கூறினால், அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்கி விடுங்கள்' என்று கூறினார்கள். எல்லோருக்கும் முன்பாக எனக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காணக் கிடைத்தார்கள். அவர்கள் இதைக் கேட்டதுமே என்னைத் திருப்பி அனுப்பினார்கள். தாமும் என்னுடனேயே வந்தடைந்தார்கள். மேலும் கூறினார்கள்:

'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவ்வாறு செய்ய வேண்டாம். ஏனென்றால், மக்கள் இதிலேயே நம்பிக்கை வைத்து இருந்து விடுவார்கள். அவர்கள் உண்மையான

முஃமினாக ஆவதற்கு, நன்மைகளுக்கான கட்டளைகள்படி செயல்படுவதே சிறந்தது.' ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவ்வாறே செய்வதற்கு அனுமதி வழங்கினார்கள்.

ஹஸ்ரத் ஸஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: குரைஷி குல பெண்கள் சிலர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் குரலை உயர்த்தி பேசிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்ததும் அஞ்சியவாறு உடனடியாகத் திரைக்குப் பின்னால் சென்று விட்டனர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அபீஸீனியாவைச் சேர்ந்த ஒரு பெண், ஆடி வித்தை காட்டிக் கொண்டிருந்தாள். நானும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோளில் எனது நாடியை வைத்தவாறு பார்த்துக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்ததும் மக்கள் ஓடிவிட்டனர்.

ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்க்ள அறிவிக்கிறார்கள்: ஒரு கருப்பின அடிமைப்பெண் நேர்ந்து கொண்டதன் காரணத்தினால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அனுமதியோடு முரசு இசைக்கத் தொடங்கினாள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர் வந்தார்கள். பிறகும் முரசை இசைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்ததும் முரசை இசைப்பதை நிறுத்திவிட்டாள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உமரே! ஷைத்தானும் உம்மைக் கண்டு அஞ்சுகிறான்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் உண்மையை உமரின் நாவிலும் உள்ளத்திலும் தொடரச் செய்திருக்கிறான்.'

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தமது சகோதரர் ஃபஸ்ல் அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்:- நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கிறேன்:

உமர் பின் கத்தாப் என்னுடன் நான் விரும்பும் இடத்தில் இருக்கின்றார். நான் அவருடன் அவர் விரும்பும் இடத்தில் இருக்கின்றேன். எனக்குப் பிறகு உமர் பின் கத்தாப் எங்கு இருக்கின்றாரோ அவருடன் உண்மை இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உடன்படிக்கை இருந்தும் மக்கத்தினரது துரோகத்தின் காரணமாக அவர்களுடன் போரிடுவதற்காக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'நாங்கள் தங்களது பாதுகாப்பில் நிராகரிப்பாளர்களுடன் போரிட வேண்டும் என நான் தினசரி துஆ செய்து வந்தேன்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'சத்திய வாக்கு உமரின் நாவிலிருந்துதான் அதிகம் வருகின்றது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு மத்தியில் அமர்ந்திருக்கும் போது எவரும் தமது பார்வையை அன்னாரை நோக்கி உயர்த்த மாட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அன்னாரைக் கண்டு புன்சிரிப்பார்கள். அன்னார் இவ்விருவரையும் கண்டு புன்சிரிப்பார்கள்.

அப்துல்லாஹ் பின் ஹந்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரைக் கண்டு, 'இவ்விருவரும் கண்ணும் காதும் ஆவார்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற கேட்டிருக்கிறேன். 'உமரை விடச் சிறந்த எந்த மனிதர் மீதும் சூரியன் உதிக்கவில்லை'.

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'எனக்குப் பிறகு அபூபக்ர் மற்றும் உமர் ஆகியோரைப் பின்பற்றுங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒவ்வொரு நபிக்கும் விண்ணுலக வாசிகளில் இரண்டு அமைச்சர்களும் மண்ணுலக வாசிகளில் இரண்டு அமைச்சர்களும் இருப்பார்கள். விண்ணுலக வாசிகளில் எனது இரு அமைச்சர்கள் ஜிப்ரீல் மற்றும் மீக்காயீல் ஆவார்கள். மண்ணுலக வாசிகளில் எனது இரு அமைச்சர்கள் அபூபக்ர் மற்றும் உமர் ஆவார்கள்.'

அபூ ஜுஹைஃபா கூறுகிறார்கள்:- நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கிறேன்: இந்த உம்மத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மிகச்சிறந்த மனிதர் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். பிறகு உமர் (ரலி) ஆவார்கள்.

இந்தக் குறிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது. இனியும் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்!

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில் பெஷாவரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய காம்ரான் அஹ்மது சாஹிப் அவர்களது ஷஹாதத் குறித்தும், மதிப்பிற்குரிய டாக்டர் மிர்ஸா நபீர் அஹ்மது சாஹிப் அவர்களும் அவர்களது துணைவியார் மதிப்பிற்குரிய ஆயிஷா அம்பர் சய்யிது சாஹிபா அவர்களும் அமெரிக்காவில் ஒரு விபத்தில் வஃபாத் ஆனது குறித்தும், கராச்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சவுத்ரி நஸீர் அஹ்மது சாஹிப் அவர்கள் மற்றும் மேற்கு ரப்வாவின் தாருர் ரஹ்மத் பகுதியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சர்தாரான் பீபீ சாஹிபா அவர்களின் வஃபாத் குறித்தும் கூறினார்கள்.

இவர்கள் அனைவரின் நற்குறிப்புகளை எடுத்துரைத்து இவர்கள் அனைவரும் ஜமாஅத்துக்கு ஆற்றிய தொண்டுகளையும் கூறினார்கள். ஜுமுஆ தொழுகைக்கு பிறகு இவர்கள் அனைவரது ஜனாஸா காயிப் தொழவைப்பதாகவும் அறிவித்தார்கள்.

.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி சுல்தான் மைதீன்)**